# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | **O.S.NO.193/2015** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | :- | **பி.சா- 01 (DW-01 )** |
| **பெயர்** | :- | **அருண்** |
| **தேதி** | :- | **14-07-2026** |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை**

நான் 2010-ஆண்டுமுதல் மருத்துவராக தொழில் செய்கிறேன். வருமான வரி செலுத்துகிறேன். நான் 16.10.2007-ஆம் தேதியன்று வழக்குச் சொத்தின் ஒருபகுதியை விலைக்கு வாங்கினேன். 3,92,000/- உரூபாய்க்கு வாங்கினேன். பரமசிவம் என்பவர் அவரது பகர அதிகார முகவர் வேலாயுதம் என்பவர் மூலம் விற்றார். நான் வெள்ளையம்மாளிடம் வாங்க -வில்லை. நான் சொத்தை வாங்குவதற்குமுன் உரிமை மூலத்தை தெரிந்துகொள்ள வில்லங்கம் எடுத்துப் பார்த்தேன். நான் எத்தனை ஏக்கர் வாங்கினேன் என்றால் அளவு எனக்கு தெரியவில்லை. முத்திரை தாள் எவ்வளவு உரூபாய்க்கு வாங்கினேன் என்று எனக்குத் தெரியவில்லை. மேற்சொன்ன சொத்து வாங்கியதை வருமான வரி கணக்கில் அப்போது காட்டினேனா என்றால் காட்டினேன். அதை நான் நீதிமன்றத்தில் இந்த வழக்கில் தாக்கல்செய்யவில்லை.

பிரதிவாதி தரப்பு 05-ஆம் சான்றாவணத்தை யார் எழுதியது என்று எனக்குத் தெரியவில்லை. பார்த்தால் தெரியும். அந்த பத்திரத்தில் யார்யார் சான்றொப்பம் இட்டனர் என்று எனக்குத் தெரியவில்லை. சொத்து விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஆவணத்தை பார்த்தால் சொல்ல முடியும். நான் அந்த சொத்திற்கு சென்றிருக்கிறேன். கடைசியாக எப்போது சென்றேன் என்றால் 02 மாதத்திற்குமுன் சென்றேன். சொத்தின் நான்கு பக்கமும் யார்யார் உள்ளனர் என்று எனக்குத் தெரியுமா என்றால் பெயர் தெரிய -வில்லை. எனக்கு விற்ற பரமசிவத்தின் உறவினர்கள் உள்ளனர்.

வழக்குச் சொத்து உள்ள ஊரில் வேறு சொத்துக்கள் வாங்கி -யிருக்கிறேன். யாரிடமிருந்து வாங்கினேன் என்று சொல்ல முடியுமா என்றால் சதீஸ்குமார், பெரியசாமி, பழனியம்மாள் ஆகியோரிடமிருந்து வாங்கியிருக்கிறேன். தேதி எனக்குத் தெரியவில்லை.

நான் சேலத்தில் வசிக்கிறேன். வழக்குச் சொத்து 20 கி.மீ தூரத்தில் உள்ளது. தற்போது காலியாகதான் உள்ளது. குத்தகைக்கு விட்டுள்ளேன். அம்பிகா என்பவர் குத்தகைக்கு எடுத்துள்ளார். சோளம் விதைத்துள்ளார்.

முதல்விசாரணைக்கான ஆணையுறுதியை எனது வழக்குரைஞர் தயாரித்தார். அதில் என்னென்ன சொல்லப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியும். நான் இந்த வழக்கில் எதிர்வழக்குரை எப்போது தாக்கல்செய்தேன் என்றால் 2008-ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு 2014-ஆம் ஆண்டு தொடுக்கப்பட்டது. 2015-ஆம் ஆண்டு நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன். 10, 15 ஆண்டுகளாக வழக்கு நடப்பதால் சரியாக தெரிய -வில்லை. எதிர்வழக்குரையில் என்னென்ன வாசகங்கள் உள்ளது என்று

தெரியும். எத்தனை புல எண்கள் என்று எண்கள் எனக்கு நினைவில்லை. 10 புல எண்கள் உள்ளன. எதிர்வழக்குரையில் எத்தனை பக்கங்களில் கையெழுத்து போட்டேன் என்றால் எல்லா பக்கங்களிலும் போட்டேன். நான் அதுபோன்று போடவில்லை என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையை படிக்காமல் அதில் என்ன உள்ளது என்று தற்போது சொல்ல முடியாது. அதனுடைய சாரம்சம் தெரியும்.

எனக்கு விற்றவர்கள் விற்ற சொத்தில் இருந்த கடனை யார் கட்டினார் -கள் என்று எனக்குத் தெரியாது. ஆவணங்களின் அடிப்படையில் எனக்குத் தெரியும். நான் விலைக்கு வாங்குவதற்குமுன் அந்த விவரங்களை தெரிந்துக் -கொண்டேன். அந்த ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் -செய்துள்ளேனா என்றால் நிறைவேற்று மனு மட்டும் நகல் கிடைக்க -வில்லை. மற்ற ஆவணங்களை தாக்கல்செய்துள்ளேன்.

பெரம்பக் கவுண்டர், பெரியதம்பி, பரமசிவம் ஆகியோர் சம்மந்தமான பட்டா வாங்கி பார்த்தேனா என்றால் வாங்கி பார்த்தேன். முதல்விசாரணையில் சொல்லியுள்ள வழக்கு எண்களின் விவரம் தெரியுமா என்றால் ஆண்டு தெரியும். எண் தெரியாது. 02 முதலேற்பு வழக்கு எண்களும் ஒரு நிறைவேற்று மனு எண்ணும் முதல்விசாரணையில் சொல்லப்பட்டுள்ளது. எண்கள் எனக்குத் தெரியவில்லை.

எனக்கு எதிர்வழக்குரையிலும் முதல்விசாரணையிலும் என்ன இருக்கிறது என்று படிக்காமல் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. பரமசிவம் பெயரில் இருந்த பத்திரம் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் பாகப்பிரிவினை பத்திரம் பார்த்துள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல்-செய்துள்ளேன். அதனுடைய வாசகங்கள் எனக்குத் தெரியாது. அதை யார்

யாருக்கு எழுதிக் கொடுத்தது என்று எனக்குத் தெரியாது. யார் சான்றொப்பம் இட்டது என்று பார்த்தால்தான் தெரியும். எனக்கு பிரதிவாதி தரப்பு 02-ஆம் சான்றாவணம் பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு 03-ஆம் சான்றாவணம் பாகப்பிரிவினை பத்திரம் ஆகும். அதனுடைய வாசகங்கள் எனக்குத் தெரியாது. சொத்து விவரங்கள் தெரியாது. அதை யார் யாருக்கு எழுதிக் கொடுத்தது என்று எனக்குத் தெரியாது. மேற்சொன்ன விவரங்களை ஆவணங்களை பார்த்தால் சொல்வேன். பார்க்காமல் தெரியாது.

பிரதிவாதி தரப்பு 04-ஆம் சான்றாவணம் பகர அதிகார பத்திரம் ஆகும். அதை பெரியதம்பியின் குடும்பத்தினரும் பரமசிவமும் வேலாயுதம் என்பவருக்கு எழுதிக் கொடுத்தனர். பெரிதம்பியின் குடும்பத்தினர் எத்தனை பேர் என்றால் ஐவர். நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. அதனுடைய வாசகங்கள் எனக்குத் தெரியாது. சொத்து விவரங்கள் தெரியாது. மேற்சொன்ன விவரங்களை ஆவணங்களை பார்த்தால்தான் சொல்வேன். பார்க்காமல் தெரியாது. அது எத்தனை உரூபாய் முத்திரை தாளில் எழுதப் -பட்டது என்று எனக்குத் தெரியாது. அதனுடன் இரசீது எதுவும் எழுதவில்லை என்றால் சரிதான். எனக்கு மேற்சொன்ன ஆவணம் குறித்து எதுவும் தெரிவில்லை என்றால் சரியல்ல.

சேலம் மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் முதலேற்பு வழக்கு எண் 1031/2007- என்ற வழக்கில் நான் மனு தாக்கல்செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். அந்த வழக்கில் என்னையும் சேர்த்துக்கொள்ள மனு தாக்கல் செய்தேன். அந்த வழக்கில் பெரியசாமி பிரதிவாதி. மேலும் பலர் இருந்தனர். குப்பாயி என்பவரும் இருந்தார். மற்றவர்கள் பெயர் எனக்குத் தெரிய

-வில்லை. நான் என்னை பிரதிவாதியாக சேர்க்க கேட்டேன். அது அனுமதிக்கப்பட்டது. எனக்கு அந்த வழக்கை பற்றி எதுவுமே தெரியாது என்றால் சரியல்ல. சொத்திற்காக அந்த வழக்கை தாக்கல்செய்திருந்தனர். எந்த சொத்துக்கள் என்று தெரியுமா என்றால் தெரியவில்லை.

நான் சொத்தில் வசிக்கவில்லை என்றும் பெரியசாமியும் அவரது குடும்பத்தினரும் மட்டும்தான் உள்ளனர் என்றும் சொன்னால் சரியல்ல. நான் பணம் கொடுத்து வாங்கிவில்லை என்றும் பெரியசாமி வகையறாவை ஏமாற்ற வாங்கினேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வாங்கிய சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை என்றும் அதனால்தான் எனக்கு இந்த வழக்கில் தாக்கல்செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.